M

# இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - நவம்பர் 2018

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் [ ] [ ] [ ] [ ] [ ] [ ]

நேரம்: 1.15 மணி

## கணக்குப்பதிவியல்

மதிப்பெண்கள்: 45

### பகுதி - அ

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: **10×1=10**

1) இருப்பாய்வின் வேறுபாடு எடுத்துச் செல்லப்படுவது
   அ) முதல் கணக்கிற்கு ஆ) வியாபாரக் கணக்கிற்கு
   இ) அனாமத்துக் கணக்கிற்கு ஈ) இலாபநட்டக் கணக்கிற்கு
2) இயந்திரம் நிறுவுவதற்கு செலுத்தப்பட்ட கூலியை கூலிக் கணக்கில் பற்று வைப்பது
   அ) பகுதி விடுபிழை ஆ) விதிப்பிழை
   இ) முழு விடுபிழை ஈ) இருமுறை பதிந்த பிழை
3) குறைந்து செல் மதிப்பு முறையில் தேய்மானத் தொகையானது
   அ) அனைத்து ஆண்டுகளிலும் ஒரே மாதிரியாக இருக்கும்.
   ஆ) ஆண்டுதோறும் குறையும்
   இ) ஆண்டுதோறும் அதிகரிக்கும் ஈ) மேற்கூறியவற்றில் எதுவுமில்லை
4) எந்நாள் முதற்கொண்டு தேய்மானம் கணக்கிடப்பட வேண்டும்.
   அ) சொத்தினை பயன்பாட்டிற்கு இட்ட நாள் முதல்
   ஆ) சொத்தினை வாங்குவதற்கான ஆணை பிறப்பித்த நாள் முதல்
   இ) சொத்தினை வியாபார வளாகத்திற்குள் பெற்ற நாள் முதல்
   ஈ) சொத்தின் இடாப்பு பெற்ற நாள் முதல்
5) சொத்தின் இறுதி மதிப்பு என்பது, பயனளிப்புக் காலத்தின் ................. அச்சொத்திலிருந்து கிடைக்கும் தொகையாகும்.
   அ) ஆரம்பத்தில் ஆ) இறுதியில்
   இ) மத்தியில் ஈ) இவைகளில் ஏதுமில்லை
6) வருவாயினச் செலவின் பலன் கிடைப்பது
   அ) கடந்த காலத்திற்கு ஆ) எதிர் காலத்திற்கு
   இ) எந்த காலத்திற்கும் ஈ) நடப்பு காலத்திற்கு
7) வணிகச் செயல்பாட்டிற்கு முந்தைய செலவுகள்
   அ) வருவாயினச் செலவுகள்
   ஆ) முன்கூட்டி செலுத்திய வருவாயினச் செலவுகள்
   இ) நீள்பயன் வருவாயினச் செலவுகள்
   ஈ) முதலினச் செலவுகள்
8) வங்கிமேல்வரைப்பற்று எதில் காண்பிக்கப்படும்?
   அ) வியாபார கணக்கில் ஆ) இலாபநட்டக் கணக்கில்
   இ) சொத்து பக்கத்தில் ஈ) பொறுப்புகள் பக்கத்தில்
9) நற்பெயர் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?
   அ) ஓர் நடப்புச் சொத்து ஆ) ஓர் நீர்மைச் சொத்து
   இ) புலனாகாச் சொத்து ஈ) புலனாகும் சொத்து
10) இருப்புநிலைக்குறிப்பு வணிகத்தின் ................ காண்பிக்கிறது.
   அ) நிதிநிலையினை ஆ) இலாபத்தினை
   இ) விற்பனையை ஈ) கொள்முதலை

## பகுதி - ஆ

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்: **4×2=8**

அவற்றில் வினா எண் 11க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

11) இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்தம் செய்யவும்.

அ) விற்பனை ஏட்டின் மொத்தத் தொகையில் ரூ. 100 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

ஆ) கொள்முதல் திருப்ப ஏட்டின் மொத்தத்தில் ரூ. 200 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.

12) கீழ்கண்ட விவரங்களிலிருந்து நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் கணக்கிடுக.

| | | |
|---|---|---|
| சொத்தின் அடக்கவிலை | - | ரூ. 10,000 |
| எதிர்நோக்கும் பயனளிப்புக் காலம் | - | 10 ஆண்டுகள் |
| எதிர்நோக்கும் இறுதிமதிப்பு | - | ரூ. 2,000 |

13) கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து சரக்கு விற்பனைக்கான அடக்கத்தினை கணக்கிடவும்.

| | ரூ. |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 10,000 |
| கொள்முதல் | 80,000 |
| நேரடிச் செலவுகள் | 7,000 |
| மறைமுகச் செலவுகள் | 5,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 15,000 |

14) நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன? ஏதேனும் ஒரு உதாரணம் தருக.

15) தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் ஏதேனும் இரண்டை விவரி.

16) பயன்தீரும் சொத்துக்கள் என்றால் என்ன?

## பகுதி - இ

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றுள் வினா எண் 17ற்கு கட்டாயமாக விடையளிக்கவும்: **4×3=12**

17) கீழ்க்காணும் விவரங்களிலிருந்து விற்பனைத் தொகையை கணக்கிடவும்.

| | | |
|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | ரூ. | 20,000 |
| நிகர கொள்முதல் | ரூ. | 2,00,000 |
| இறுதி சரக்கிருப்பு | ரூ. | 30,000 |
| நேரடிச் செலவுகள் | ரூ. | 10,000 |

விற்பனையில் மொத்த இலாப விகிதம் 20%.

18) பின்வரும் பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவற்றைத் திருத்துக.

அ) கீதாவுக்கு ரூ. 500 செலுத்தியது தவறுதலாக சீதா கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

ஆ) அறைகலன் ரூ. 750க்கு விற்றது, விற்பனைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

இ) இயந்திரம் நிறுவுவதற்குச் செலுத்திய கூலி ரூ. 1,000 கூலிக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

19) கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு, நேர்க்கோட்டு முறையில் இரண்டு ஆண்டுகளுக்கு இயந்திரக் கணக்கு தயாரிக்கவும்.

இயந்திரம் வாங்கிய நாள் 01.01.2016.

| | | |
|---|---|---|
| இயந்திரத்தின் விலை | ரூ. | 36,000 |
| வண்டிக்கட்டணம் | ரூ. | 2,500 |
| நிறுவுதல் செலவு | ரூ. | 1,500 |

இயந்திரத்தின் வாழ்நாள் 5 ஆண்டுகள்.

20) விக்டரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து 31, டிசம்பர் 2017ஆம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கினைத் தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| சரிகட்டப்பட்ட கொள்முதல் | 80,000 |
| விற்பனை | 90,000 |
| சரக்கு கொள்முதலுக்கான நகர் நுழைவு 'வரி | 11,000 |
| இறுதிச் சரக்கிருப்பு | 7,000 |
| உள்தூக்குக்கூலி | 3,000 |
| சரக்கு கொள்முதலுக்கான இறக்குமதி வரி | 6,000 |
| கொள்முதல் மீதான கப்பல்துறைச் செலவுகள் | 5,000 |

21) முதலின வரவு மற்றும் வருவாயின வரவு வேறுபடுத்தவும். (ஏதேனும் 3)

22) இருப்பாய்வு வெளிப்படுத்தாத பிழைகள் யாவை? (ஏதேனும் 6)

## பகுதி - ஈ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **3×5=15**

23) ஒரு கணக்காளர் கீழ்க்காணும் பிழைகளை இருப்பாய்வு தயாரித்த பின் கண்டறிந்தார். அனாமத்துக் கணக்கு உள்ளது எனக் கருதி அப்பிழைகளைத் திருத்தம் செய்யவும்.

அ) இயந்திரம் ரூ. 3,500க்கு வாங்கியது கொள்முதல் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

ஆ) ரெய்னாவுக்கு ரூ. 1,800 சம்பளம் வழங்கியது அவர் கணக்கில் பற்று வைக்கப்பட்டது.

இ) வட்டி பெற்றது ரூ. 200 தரகுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

ஈ) நிலாவிடமிருந்து கடனுக்கு ரூ. 1,800க்கு சரக்கு வாங்கியது கணக்கு ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

உ) பயன்படுத்தப்பட்ட அறைகலன் ரூ. 350க்கு விற்றது விற்பனைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

(அல்லது)

சரணின் இருப்புகளிலிருந்து 2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| பொறியும், பொறித்தொகுதியும் | 8,00,000 |
| நிலம், கட்டிடம் | 6,00,000 |
| அறைகலன் | 1,70,000 |
| வங்கிமேல்வரைப்பற்று | 1,80,000 |
| கடனீந்தோர் | 2,40,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 1,00,000 |
| இறுதி சரக்கிருப்பு | 4,00,000 |
| முதல் | 15,00,000 |
| எடுப்பு | 1,30,000 |
| நிகர லாபம் | 2,80,000 |

24) பின்வரும் செலவினங்களை முதலின, வருவாயின அல்லது நீள்பயன் வருவாயின செலவினங்களா என வகைப்படுத்தவும்.

1. புதிதாக நிறுவப்பட்ட இயந்திரத்தினைச் சோதனை ஓட்டம் மேற்கொள்வதற்குச் செய்த செலவு ரூ. 25,000.
2. பழையக் கட்டடத்தைப் புதுப்பிப்பதற்காகச் செய்த பழுதுபார்ப்புச் செலவுகள் ரூ. 15,000.
3. தொழிற்சாலை உரிமம் புதுப்பித்தது ரூ. 10,000.
4. புதிய பொருளைச் சந்தையில் அறிமுகப்படுத்த மேற்கொண்ட பேரளவிலான விளம்பரச் செலவுகள் ரூ. 12,00,000.
5. கட்டடத்தை வெள்ளை அடிப்பதற்கானச் செலவு ரூ. 80,000.

(அல்லது)

ஜனவரி 1, 2015 அன்று பயன்படுத்தப்பட்ட ஒரு இயந்திரம் ரூ. 58,000க்கு வாங்கப்பட்டு பழுதுபார்ப்புக்காக ரூ. 2,000 செலவு செய்யப்பட்டது. ஜூலை 1, 2017 அன்று அந்த இயந்திரம் ரூ. 26,170க்கு விற்கப்பட்டது. குறைந்துசெல் மதிப்பு முறையில் தேய்மானம் ஆண்டுக்கு 10% எனக் கொண்டு 2011 முதல் 2013 வரை இயந்திரக் கணக்கினைத் தயாரிக்கவும். கணக்குகள் ஆண்டுதோறும் டிசம்பர் 31ல் முடிக்கப் பெறுகின்றன.

(அல்லது)

25) பின்வரும் தகவல்களிலிருந்து திரு. முருகன் என்பவரின் 2017 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார, இலாப நட்டக் கணக்கைத் தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| நிலம் | 40,000 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 2,500 |
| விற்பனை | 7,000 |
| சம்பளம் | 2,600 |
| இயந்திரம் | 52,000 |
| கடனீந்தோர் | 8,000 |
| கூலி | 2,700 |
| பெற்ற தள்ளுபடி | 2,500 |
| கொள்முதல் | 3,300 |
| வங்கி ரொக்கம் | 6,400 |
| இறுதிச் சரக்கிருப்பு | 4,000 |

(அல்லது)

ஒரு தயாரிப்பு நிறுமம், ஏப்ரல் 1, 2010 அன்று பொறிவகை மற்றும் இயந்திரம் ரூ. 4,50,000க்கு வாங்கி, நிறுவுதல் செலவாக ரூ. 50,000 செலவழித்தது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்தப்பட்ட பிறகு அச்சொத்தானது ரூ. 3,85,000க்கு விற்கப்பட்டது. தேய்மானம் ஆண்டுதோறும் 15% நிலைத் தவணை முறையில் நீக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் மார்ச் 31-ல் முடிக்கப்படுகின்றன. இயந்திரக் கணக்கினைத் தயாரிக்கவும்.

---------